# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2018/15 - 2017 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2017.05.12

*2018/15 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி. செ. கோவை இல.: KIDS/LND/01/ACQ/07.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2013/VE/163.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி இருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட கோரளை மெத பத்துவையில், கிரிஎல்ல பிரதேச செயலகப் பிரிவில், யட்டிபவ்வ கிராம அலுவலர் பிரிவில், யட்டிபவ்வ கிராமத்தில் அமைந்துள்ள, இரத்தினபுரி சிரேஷ்ட நில அளவை அதிகாரி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 218 ஆம் இலக்க நிலஅளவைத் திட்டப் படத்தில் மேலதிக இல. 42, தாள் இல. 45 இல் 1140, 1141, 1142, 1143, 1144, 1145, 1146, 1147, 1148 ஆகிய லொட் இலக்கங்களைக் கொண்ட எல்லகந்த தோட்டம் என்னும் காணியின் விஸ்தீரணம் 5.1342 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி (புதன்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு கிரிஎல்ல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஆர். எம். பிரதீபிகா டீ. இலுக்கும்புர,
பிரதேச செயலாளர்,
கிரிஎல்ல.

பிரதேச செயலகம்,
கிரிஎல்ல,
2017, மே 08.

05 - 756


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.